தா. க. தாயுமான பிள்ளை,

மேல்மங்கலம்.

மிக்க பெருமை பெற்று கல்வி யறி வொழுக்கத்திற்
றலைசிறந்து விளங்கும்
அன்பார்ந்த ஐயா வந்தனம்.

விற்பன்னராகிய தாங்களறியா உற்பனச்செய்தியைத் தமி
யேன் றெரிவிப்பதாயெண்ணி அடியிற்கண்ட செய்தியை யெழுதத்
துணியவில்லை.

யானும் ஓரிந்தியன், தமிழன் என்னும் மக்கட் சுதந்திர
உரிமையின் கடமையிலேற்பட்ட ஆவலிற் றெரிவிப்பான்
வரைந்தேன்.

செய்தி.

மக்களுண்டாகும் (கருவில்) கர்ப்பத்தில் தாய், தந்தைய
ருணர்ச்சியும், உணர்ச்சி வளர்வதிற்கருத்தும், கருத்தில் வார்த்தை
யும் ஒன்றன்பின்னொன்றாய் வெளி வருகின்றன. இயற்கையிலும்
சேர்க்கையிலுமுள்ள தாய்மொழி, அறிவை அதிகமாய்வளர்க்
கின்றது.

சிறு பருவத்திற் பேசும் வார்த்தைகளுக்கேற்ற எழுத்துக்
களின் உச்சரிப்பில் எளிதிற் கல்வி பயிலவும், அதன் வழி வாசிக்க
வும், வாசக முதிர்ச்சியில், நூற்கருத்தும், நூலுணர்வில், உலக
வாழ்க்கையநுபவமும், அநுபவத்திற் பேரறிவும், தடையின்றி
விரிவுபெறத் தாய் மொழியே சிறந்த சாதனமாம்.

பிறமொழி புகுத்த லதற்கிடையூறன்றெனின், உள: வாசகத்
தேர்ச்சிபெற்று நூலுணர்வுபெறும் இளமைப் பருவத்தில் மற்றோர்
மொழியும் புகுத்தில் வளர் பருவத்தில் வளர்ந்து விரிந்து பலன்
தரும் செடியின் வளர் கொழுந்தை மொட்டையாக்கி அலங்கார
உபயோகமானசெடி (குரோட்டன்ஸ்)யாய்ச் செய்யுந்தன்மைத்தாம்
மற்றும் வருவனவற்றுலறியலாம்.

இந்தியாவிற் ஙூய்மொழியுடன், ஆங்கிலம் புகுத்தியபின் தாய்மொழிக் கல்வியறிவிற், சமூக மதவுண்மையை மயக்கமற்ற வழியிற்றெளிவு பெறுமலும், தெரிவிக்கும் கலைவாணர்களில்லாமலு மொழிந்தன.

சிறப்பாக, தற்காலத் தமிழகமாய்த் திருவேங்கடம் வடக் காய்த், திருநெல்வேலி தெற்காயும், கிழமேல் கொழும்பு, திருவாங் கூர் எல்லையாயுமுள்ள, தமிழ்நாட்டில்வசிக்கும் பல (பாடை) மொழி பேசும் மக்களின் கல்வியறிவிற்கு குறள், நாலடியார் முதலிய சங்க நூலும், தமிழ்ப்புராண சாத்திரங்களுமே, பெரிதுந் துணை புரிந்து கல்வியறிவாற்றலளித்து வந்ததும் வருகின்றதுமன்றி, உலகெங் கும் அதன் கருத்துக்களைப் போற்றுகின்றன.

ஆங்கிலம் புகுந்தபின் அவற்றின் முதிர்கல்வியிற், பிறதேச சரித்திர நூலாராய்ச்சியினும் பிற கொள்கைக்கவர்ச்சியினுமீடு பட்டதாற் பிறந்த தேசத்தில் மக்கட்கேற்படுமியற்கை புணர்வில் இடம்பொரு ளேவலுக்குத் தக்கவாறு. சமூக, சமய, முறையி லுறுதிபெற்று, அந்நிலையற்றிருந்து நிலைபெற்ற அரசியற், பலனடை யாமற் பிற தேசத்தை நினைத்தல் மாத்திரமான கனவு நிலையில் நிற்க நேர்ந்தது.

மற்றும் மெய்யறி வடையும் சாதனமான ஒழுக்கம், சிறு பருவத்திலிருந்து படித்தறியும் தாய்மொழியிலன்றி, ஏனைய பிற மொழியிலெவ்வாறடைவது? கல்வியறிவின் முதிர்ச்சியும், ஊக்கமுப, தாய்மொழியிலேற்படுவதுபோல் அந்நிய பாடையிலேற்படா.

அன்றியும் பல பாடை புகுத்தின் எம்மொழித்திறனில் நிலைத்து நின்று அம்மொழி பிற்காலத்து மக்கட்கு, தாய் மொழி யென்னக் கொடுப்பது.

தாய்மொழி, ஆங்கிலமென்னு மிரண்டிலும் ஆங்கில முதிர்ச் சிபெற்ற கலாசாலை மாணவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் தாய் மொழி, அல்லது ஆங்கிலக் கல்வி முதிர்ச்சி பெற்ற கலைவாணரா யிருக்கிறார்கள்.

ஒன்றையுங் கருதாது தேச ஒற்றுமை யென்ற கருத்தில் இந்தியாவெங்கணுமொரேமொழி தேச பாடையாய் நிற்க நினைந்து இந்தியைக் கட்டாயமாய்ப் புகுத்தக்கருதின், இப்போதைய அரசியற் கொள்கை மாறுங்காலத்தில் மற்றுமோர் மொழியைத் தேச பொது (மொழி) பாடையெனப் புகுத்தின், மக்கள் எம்மொழியை தேசப் பொதுமொழி அல்லது தாய்மொழியெனப் பற்றி நிற்பது? எம்மொழி யுறுதியிற் கல்வியறிவின் நிறனடைவது?

கல்வியறிவு வேண்டுவதில்லை, எம்மொழியினு மெழுதப் படிக்கத் தெரிந்தாற் போதுமெனில் பிற்காலத்திய தேச மக்கள் எவ்வறிவு கொண்டு உலக அரசியல் ஞானமடைவது?

கல்வியாற்றலன்றே, நலந்தீங்கறிந்து, கடமையிற்றணிந்து, எக்காரியத்தையும் செய்ய வூக்க மளிக்கும்.

மற்றும் மெய்ப்பறிவடைந்து இன்புறவதற்கு, இறைவனருள் பெறத், தம் தாய் மொழியிலே சமயாசாரியர்களும், அடியார்களும, திருவாய்மொழி, தேவாரம் பாடியருளினர்கள். தமிழ்த்தாய்மொழியிலேற்பட்ட உட்கருத்தின் தெய்வீகமன்றே; பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப்பின்சென்ற பச்சைப் பசுங் கோண்டலே, யென்ற கருத்தில் திருமால் திருவிழாக் கொண்டருளும்போது தமிழிலே திருவாய் மொழி ஓதுவோர் பெருமானுக்கு முன் செல்ல, வட மொழிவேதமோதுவோர்பின்செல்வது, பெருமான், தமிழ்மறையை விரும்பி, யதன்பின் செல்ல வட வேதம் பெருமானைத் தேடி, யவர் பின் வரலுமாய் நடக்கின்றது. மற்றுமுள தமிழ்ப்பெருமை யளவில, விரிப்பிற் பெருகும்.

அற்றே போலத்தத்தம் தாய்மொழியிலேற்படும் தெய்வத் தன்மையில் ஒவ்வொரு தனித்தொகுதியு மின்புற்று நிற்கச்செய் தலன்றே நற்செயல்.

எங்கும் தாமாய், அகண்ட நிலையடைந்து, பிரிதொன்றுள வெனவறியாவியல்பிலுள்ள, பெரியோர்கள் உலகவிடய மறியார்கள்.

அடுத்தபடியாய் மெய்யறி வடைந்தும் பிராரப்தத்தால் (செய்வினை முடிவில்) உலகவிடய அநுபவமுள்ளவர்கள் மக்களிடை நல்லறிவுபரத்த முற்பட்டுத் தொண்டாற்றுவார்கள்.

மற்றும் தத்தம் அறிவுப்பருவத்திற் கேற்பத் தேசமக்கட் குப்பசியகற்றல், உடல்நலம் கருதல், முதலிய தொண்டாற்று வாருமுளர்.

இந்தியாவில் தொன்று தொட்டு இல்லாதார்க்குதவுவதென் பது உணவளித்தல், கல்வி பயில்வித்தல், என்னுமிரண்டுமாம். அவ்விரண்டினும் கல்வி கொடுத்து அறிவை வளரச்செய்தல் உயர் வென்பதறிஞர் கூற்று.

தேசத்தின் பசியகற்றுவதற்காக அறிவைக் குறைக்குஞ் செயல்புரியின் பசியகற்றும் செயல்புரியுமறிவு மக்கட்கு நாளடை வில் மழுங்கிக்குறையுமன்றே.

அவ்வாற்றல் உணவை விரும்பியுயும் மிருகம் முதலிய (மாக்கள்) போல மக்களும் நலந்தீங் கறியாவியல்பில் உணவே பெரிதென நிற்கும் நிலைதேரும்.

சிறுவயதில், வாசனை முதிர்ந்து வருவதற்குத் தக்கவாறு மெல்ல, மெல்ல எளிதில்வரும் தாய்மொழிக்கல்விபுகுத்தி மூளைக்கு வலுவேற்பட்டபின் பல கருத்தை விரும்புமவாவினில் மற்றோர் பாடைபுகுத்திற் படிப்படியாய்க் கல்வி வளர்ந்து அறிவு விரியும்.

அஃதன்றி இளமையிற் பல (மொழியும்) பாடையும் படித்துத் தேர்ச்சி பெறட்டுமெனப் பத்துப்பதினைந்து வயதில் (பிராயத்தில்) மூன்றாவது பாடையாக இந்தியையும் கட்டாயமாய்ப் புகுத்தில் கனிந்து பிடித்தவரும் நெருப்பில் அதிகமான விறகிடின் தலை தூக்காமல் அணைந்துவிடுவதோ, வன்றிப் புகைந்து கெடுவதோ இவ் விரண்டிலொன்றும். ஓர் சிறிய பாத்தியில் கத்திரி மிளகாய் என்னும் இரண்டு செடியிருக்க உடன் மற்றுமோர் வெண்டைச்செடியையிட்டு மூன்று பலனடைய நினைப்பின் எந்தப்பலனும் சரிவர அடைய முடியாவாம்.

ஆகலின் கல்வியை மக்களிடை பரவச் செய்யக்கருதும் நன்னெஞ்சத்திற்கு இப்போதுள்ள தமிழென்னும் தாய்மொழியுடன் ஆங்கிலம் பயிலுவதே மிகமிகக்கஷ்டமாயிருக்க சிறுவரிடை மற்றோர்பாடையும் கட்டாயமாய்ப்புகுத்தல் முற்சொன்னது போல் பிடிக்கக் கனியுந் தீயில் விறகிடுவதாய்க்காட்டி அதிக விறகிட்டுக் கெடுக்குந் தன்மைத்தாம். மக்களி யாவராயினும் அறிவு, அறியாமையென்னு மிரண்டு முடையவர்கள்.

உலகவிடய விவகாரங்களிற் கரணைந்திரிய வயமாயும், அந்நிலை விடின் பேரறிவு (கடவுள்) வயமாயும் நிற்க சேர்வதால் எப்பொழுதும் ஞாபகமு மறதியுமுடையதான சுதந்தரமில்லாதவர்களே. ஆதலின் தேசத்தொண்டாற்றுபவர்கள் ஒருவரையே பின் பற்றித் தாம் நினைத்ததையே பலவித்திலும் திருத்தி முன் பின் பக்கம் பாராமல் தம் போக்கில் நடத்தக்கருதிற் பெருங்கூட்டமான மக்கள் இடையூறடைவார்களென்பதை யறிய ஞாபகமூட்டுகிறேன்.

கட்டாய இந்தி வைத்தலிற் கேடு.

(1) தாய் மொழிக் கல்வியில் உறுதி பெறு அறிவு.

(2) தமிழ், ஆங்கிலம், இந்தி, யென்ற மூன்றிலொன்றினும் கல்வி முதிர்ச்சி பெறுமை.

(3) ஒன்றென்னு முறுதிபெற்றுப்பலனடையும் சமூக, சமய வொழுக்கமின்மை.

மேற்சொன்ன இந்திப்படிப்பில் நன்மையெனச் சொல்லப்படுபவை.

(1) தேசமக்களொற்றுமைக்கு ஒரேபாடை

(2) வடதேசத்திற்குச் செல்லும் வியாபாரியோ யாத்திரீகரோ சங்கடமடையாம லொருவர்க்கொருவர் பேசிக்கொள்ளல்.

(3) இயற்கையில் மக்கட் பழக்கத்திற்றோன்றும் பிறர் நாகரீக விருப்பம் போற் பிறர் பாடைவிருப்பம்.

நடுநிலை கருதினும் மக்கட்குள்ள மறதியில், கும் சார்பின் மிகுதிப்பழக்கம், தன்னையறியாமல் நுழை வதியற்கை. அவற் றினின்றும் விலகி நன்காருயந்து சார்பை விலக்கிப், பொது வினிற் றல் பேரறிவின்றிறம்.

பலகோடி மக்கட் பிரதிநிதியாய் (தலைவராய்) யமர்ந்துள்ள நிலையில் மிக்க நிதானமாய் மிகுதியும் கொள்கைச்சார்பின்றி பெருங் கூட்டமான மக்கள் கருத்துக்கொத்தவாறு தம்கருத்தையும், பொதுப்படத் திருத்தி இயலுமளவில், எதிர்ப்பின்றி தேச மக்களின்புற ஆள்வதன்றே தேசத்தொண்டும், செய்வினை யனும்.

சமூக, சமயக்கொள்கையில் இம்மை, மறுமை நம்பிக்கையிற் புகலிடமாயுள்ள நம், தாய்மொழியாம் தமிழ் வலுக்குறைய; நம், தோழர்கட்குரித்தாய் நமக்கு பிறமொழியாயிருக்கும் இந்தி பயின்றும், அதினின்றும் அதிகப்பலன் பெறுமல் இரண்டிலு, முறதியற்ற நிலையில் மக்களிருப்பின் யாருக்கு என்னபயன்.

ஆங்கில அரசு நிலைத்தபின் அவர்களுக்கு வேண்டிய பொருளாதார முதலிய எவ்வழிகட்கும் அவசியமான தேவையா, யின்றியமையாததா, யிருந்தபொழுது கட்டாயமாயெவ்வித தடங்கலுமின்றி இந்திய மக்களியாவரும் விருப்பத்தில் ஒப்புக்கொண்டு ஒருவர்க்கொருவர் உபயோக நிமித்தம் ஆங்கிலம் பொதுப்பாடையாயிருக்கநேர்ந்தது. அவற்றுல் நம் தேச அரசியலாட்சி முறையும், பல தேசங்களின் ஆட்சிமுறையும் பொருளாதார விவரமும், நம்மிடமிருந்தும் நாமறிய முடியாதிருந்த ஆகம (உபநிஷத) முதலிய மெய்யறிநூல்களில் உண்மையும் மற்றும் ஆங்கில முதிர் கல்வியிலறியவும், உதவியாயின.

வெள்ளையர், அரசாட்சியிலிருந்தபின்றி இந்தியர் சுயாட்சிபெறின் அவ்வப்போதேற்படும், தலைவர் சொற்படியோ, வன்றியதிகக் கூட்டத்தினர் சொற்படியோ, அரசியலிலும் சமூக மதத்திலும் பொருத்தமான கருத்துக்களுடைய ஓர் பாடையை நிறுவநேரும்.

அப்போது மக்களைத் தன்புறத்தியோ பலாத்காரத்திலோ பொதுப்பாடை புகுத்தல் அரசியல் முறை யென்னல் பொருத்தமாம். அங்ஙனமின்றி, ஆட்டிவைப் போலும் ஆடுபவர்க ளொப்ப அந்நியராட்சியின் கட்டளையில், அதிக மக்களபிப்பிராயத்தில், அரசு புரிபவர்கள் சிறுபான்மையான தேசமக்களின் சமூக மதக் கொள்கையை யாதரித்துத் தம் கட்சி வலுவை பிற கட்சி தாமே பெரிய நாளடைவிலொன்று படுத்தி தம்கொள்கையை யுயர்த்துவ தன்றித் தம்கட்சியிற் கிடைத்த அரசியலி லேதேனுமொன்றைத் தம்விருப்பின் படி செய்து சிறுபகுதிமக்களாயினும் வருந்தும்படி செய்யின் கட்சி மாற்ற வரசியலில் முற்செய்தவை மாற்ற மடையின் வீண் கட்ட நட்டங்களும் ஓர் தேசமக்களே யொருவரை யொருவர் (சூறேறித்து) விறேறித்து நிற்க நேரும்.

சமுகந்திருத்தி ஒத்துமை பெருப்பழக்க வய மூடைய நாம் ஓர் பாடையில் ஓரே கருத்தாய் மக்களைத்திருத்த லெப்படி முடியும். பெருங் கூட்டமான மக்களை இயலு மளவு தன் கொள்கையை அவர்கள் நன்குணர்ந்து பின் பற்றும் அறிவுடையவர் களாக்கி எவ்வழியினும் பொது வாழ்க்கை நடத்தல் சாலச்சிறந்தது.

அஃதன்றி அறிவு குறைந்த பொறிப் பொம்மை கூட்ட மாய் மயங்கியகருச்துக்கொண்ட பெருங் கூட்டமக்கட்பிரதிநிதியா ய்த்தலைமைபெறின் நற்பலனும் கைம்மாறிலா உதவியும் பெருமையும் இன்றும். (இது அசெம்பிளியை அல்ல பொது).

சிறுவயதிற் கேற்ப இந்தியை இஷ்ட பாடமாய்ப் படிக்கலா மென்பதாய் வைத்து அவற்றிற்கு எதிர்ப்பேற்படின் அவ்வெதிர்ப்பு, கட்சி விரோதமோ மற்றும் தனித்த விரோதமோ வெனவொன் றைச் சொல்லலாம். அன்றி இந்தி கட்டாயப்பாடமாக படிக்காக வேண்டும் என்ற முறையில் வற்புறுத்தி மக்கட் சுதந்தர உரிமை யைக்குறைப்பதாலன்றே முற்சொன்ன காரணங்களால் தாய்ப் பாடை சுருங்கி நாளடைவிலுருவின்றிக் கெடுமென்னும் பயத்தில் தாய்மொழிப்பற்றுடைய அறிஞர்கள் மனச்சஞ்சலத்துடன் எவ் வித சட்டத்தையும், கஷ்டத்தையும் எதிர்பாராமல் தம் கடமையி லெதிர்க்கக் கருதுகிறார்கள்.

பற்றவிடயம்போல இந்தி பாடம் வைப்பதற்கு முன்னே இப்பொழுதோ பொது மக்கட்குத் தெரிவித்து அவற்றின் சிறுபான்மையோர் எதிர்த்தாற் பொருட்படுத்தாது கட்டாயப் படுத்தின் அக்கொள்கையை அதிக மக்கட்கருத்துப்படி நிறைவேற் றியதென்னலாம் அன்றி தனிக்கருத்தில் இந்தியைக் கட்டாய பாட மாக்கக்கருதி ஓரேபிடியானநிலையினிற்றல் முறையா, நியாயமா.

எவ்வழியினும் தெளிவு பெற்ற நிச்சய புத்தியில் நிலைத் துள்ள தாங்களுக்கு தெரிவிக்குமுறையில் நம் தேசத்தமக்கள் எவ் விஷயத்திலும் ஒத்த கருத்துள்ளவர்களென்பதை அயல் நாட்டார் அறிந்து கொள்ள, பலகட்சி மக்கள் ஒருவருக்கொருவர் கருத்து மாற்றத்திற் பிணக்குறினும் நிதானித்து நட்த்து முறை யிற் கருத்தை மாற்றிக்கொண்டு தயவுடன் இரங்கிய மனதில் விட்டுக்கொடுக்கு முறையில் இந்தியைக் கட்டாயப்பாடமாக்காமல் இஷ்ட பாடமாக்கிச் சிறுவயது மாணவர்கள் சங்கட மற்றுக் கல்வி பயிலச் செய்யவேண்டுமாய் நனியும் பணிவுடன் கேட்டுக்கொள் கிறேன்.

பிழையுளன பொருத்திடுக.

தா. க. தாயுமான பிள்ளை,
மேல்மங்கலம் 12—11—38.

மாணிக்க விலாஸ் பிரஸ், பெரியகுளம்:-38-500.